பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 14 | 28-06-94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 130

## கரும்புலிகள் நாளை முன்னிட்டு சிரமதானம், கருத்தரங்கு ஆரம்பம்

எதிர்வரும் கரும்புலிகள் நாளை முன்னிட்டு பல வேலைத்திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் சிரமதானங்கள், முன்னோடிக் கருத்தரங்குகள் என்பன இன்று தொடக்கம் மூன்றாம் திகதி வரை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் வீதிகளில் கேந்திர இடங்களில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு வருவதுடன் பந்தல்கள் அமைக்கப்பட்டு கரும்புலிகளின் படங்கள் வைத்து மக்கள் அஞ்சலி செலுத்தவுள்ளனர். மேலும் யாழ்குடா நாட்டின் பல பகுதிகளிலும் வீதிக்கு குறுக்கே பதாதைகள் கட்டப்பட்டு வருவதுடன் ஒலி பெருக்கி மூலம் கரும்புலிகளின் தியாகத்தைப் போற்றும் பாடல்கள் ஒலிக்கச் செய்யப்படவுள்ளன.

# குண்டு வீச்சு விமானம் மீது திருமலையில் புலிகள் தாக்குதல்

## விமானி ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

**திருமலை மாவட்டத்தில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்த விமானப்படை விமானம்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் விமானி ஒருவர் படுகாயம் அடைந்தார். விமானத்திற்கும் சேதம் ஏற்பட்டது.**

இது குறித்து சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா தகவல் வெளியிடுகையில்,

திருகோணமலை மாவட்டத்தில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்திக் கொண்டிருந்த சிறிலங்கா விமானப் படை விமானம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் படுகாயம் அடைந்தார் எனத் தெரிவித்தார்,

வெல்லரிச்குளம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் புலிகளின் இலக்குகள் மீது குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த விமானத்தை புலிகள் திருப்பித் தாக்கியதாகவும் அதன்போதே இவர் காயமடைந்ததாகவும் மேலும் அவர் தெரிவித்தார்

## சு. க. அமைப்பாளர் மீது இனம்தெரியாதோர் தாக்கு

(கொழும்பு)

உடுதும்பர தேர்தல் தொகுதியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச அலுவலகத்தின் முன்னால் வைத்து கட்சி அமைப்பாளர்மீதும் ஆதரவாளர்கள்மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அப்பிரதேச அலுவலகத்தை திறந்து வைத்துவிட்டு அவ்விடத்தில் கூடிநின்றவர்கள்மீது இலக்கத்தகடற்ற வாகனத்தில் வந்த இனம்தெரியாத நபர்கள் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலின்போது அவ்வாகனத்தில் வந்த குண்டர்கள் தாம் கொண்டுவந்த தடிகள், கத்தி, வாள் போன்றவற்றினால் இவர்கள்மீது தாக்குதல் நடத்தியதாகவும் இதனால் பல பொதுமக்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தியவர்கள் வந்த வாகனத்தில்வேகமாகத் திரும்பிச் சென்று விட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

## தாக்குதலைக் கண்டித்து மக்கள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

உடுதுபர சுதந்திரக் கட்சி அலுவலகம் முன்னர் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக அப் பகுதி மக்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

உடுதும்பர நகரத்தின் மத்தியில் நடைபெறும் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இலக்கத் தகடற்ற இனம் தெரியாத வாகனத்தில் வந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காக பொலிஸ் நிலையம் முன்னால் மறியல் செய்ய இருப்பதாக

## இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாக்களிப்பு நிலைகள் அமையும்

### டி. பி. விஜேதுங்கா பிரேமச்சந்திரனிடம் தெரிவிப்பு

பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள், தெல்லிப்பழையில் வைத்தே பெற்றுக் கொள்ளப்படும். தற்போதைய வசதிகளின்படி

கொள்ளப்படுகின்றன இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் திரு. சுரேஷ்

தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் அங்கு போட்டியிடவிருக்கும் கட்சிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும்

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க

அநுராதபுரம் சிறிமாபோதியவில் அடுத்த மாதம் 2-ம் திகதி நடைபெறவிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை தாங்குவார் என தெரிவிக்கப்படுகிறது.

இக் கூட்டத்தில் கட்சியின் பல சிரேஷ்ட உறுப்பினர்களும் கலந்துகொள்வர் என தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் போட்டியிட தமிழ்க் குழுக்கள் ஆயத்தம்

எதிர்வரும் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளான ஐ.தே.க, சிறிலங்கா சு. கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழர்விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல். எவ், ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. ஆகியனவும் வேறு இரு சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுவதற்கு தம்மைத் தயார் படுத்திக் கொண்டுள்ளன.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## காபந்து அமைச்சரவை தொடர்பான எதிரணியின் கோரிக்கை ஜனாதிபதியால் நிராகரிப்பு

(கொழும்பு)

காபந்து அமைச்சரவை தொடர்பாக எதிர்க்கட்சிகள் முன்வைத்த கூட்டு யோசனையை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா நிராகரித்துள்ளார் என்றும், தற்போது அமைச்சராக இருக்கும் சகல அமைச்சர்களும் அமைச்சரவையில் இடம்பெறுவார்கள் என உறுதியாக தம்மிடம் தெரிவித்ததாக சுதந்திரக் கட்சி பொது செயலர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதன் நோக்கம் பாராளுமன்ற தேர்தலின் போது

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## உணுப்பிட்டி பகுதியில் ஆயுதங்கள் பிடிபட்டன

### பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவிப்பு

(கொழும்பு)

பேலிய கொட பொலிசார் மேற் கொண்ட சுற்றிவளைப் பின்போது உணுப்பிட்டிய பகுதியில் வீடொன்றில் இரு

பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இச் சுற்றி வளைப்பின் போது ஐந்து பேர் கைது செய்யப்பட்டதாகவும் இதில் இர

கின்றனர்.

உடுதும்பர நகரத்தின் மத்தியில் நடைபெறும் இவ் உண்ணா விரதப் போராட்

எடுக்கத் தவறியதற்காக பொலிஸ் நிலையம் முன்னால் மறியல் செய்ய இருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது

ரங்கள், தெல்லிப்பழையில் வத்தே பெற்றுக் கொள்ளப்படும். தற்போதைய வசதிகளின்படி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள தேர்தல் தொகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான ஒழுங்குகளே மேற்

விஜேதுங்கா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் திரு. சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பாக யாழ் குடாநாட்டில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்

அங்கு போட்டியிடவிருக்கும் கட்சிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் சுரேஷ் பிரேமச்சந்திரன், கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி விஜேதுங்காவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித

( 4 ஆம் பக்கம் பார்க்க )

பின்போது உணுப்பிட்டிய பகுதியில் வீடொன்றில் இருந்த விடுதலைப் புலிகளின் மேலும் ஒரு ஆயுதக்கிடங்கை கைப்பற்றியதாகவும் இதில் வெடிமருந்துகள் மற்றும்ரவைகள் கைப்பற்றப்பட்டதாகவும்

போது ஐந்து பேர் கைது செய்யப்பட்டதாகவும் இதில் இரண்டு விடுதலைப் புலிகளின் ஆதரவாளரும் வீடு வாடகைக்கு கொடுத்த சிங்களவர் ஒருவரும் அடங்குவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கூரே மீதான சந்தேகம் இன்னமும் தீரவில்லை

(கொழும்பு)

வீடமைப்புத்துறை அமைச்சரும், ஐ. தே. கவின் முன்னாள் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் நெருங்கிய சகாவுமான சிறிசேன கூரேயின் நடவடிக்கைகள் அரசாங்க உயர் மட்டத்தால் தொடர்ந்து கூர்ந்து அவதானிக்கப்பட்டு வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவரது பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த காவலர்கள் மாற்றப்பட்டு அரச மேல் மட்டத்திற்கு விசுவாசமானவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்ற மூத்த இராணுவ அதிகாரி ஒருவருடன் இணைந்து சிறிசேன கூரே சதி செய்ததாக சிங்கள வார இதழான 'ராவய' முன்பு செய்தி வெளியிட்டிருந்ததும் அச்செய்தி பொய்யானது என அரசு மறுப்பு வெளியிட்டிருந்ததும் தெரிந்ததே.

# பொதுஜன ஐக்கியமுன்னணி வேட்பாளர் தெரிவில் தீவிரம்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியில் சேர்ந்துள்ள கட்சிகள் தமது மாவட்ட அடிப்படையிலான உறுப்பினர் பட்டியலை தற்போது தம்மிடம் அனுப்பி வைத்திருப்பதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஜி.மு. ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

''லங்காதீப'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது அப் பட்டியல் தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் குழு பரிசீலனை செய்துவருவதாகவும் மிக விரைவில் இது குறித்து முன்னணியின் தலைவர்கள் இறுதி முடிவெடுக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# பிரேமாவின் மனைவி, மகன் ஐ. தே. க. சார்பில் போட்டி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசாவும் மகன் சஜீத் பிரேமதாசாவும் இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட விருப்பதாக தெரிய வந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இவ் இருவரும் போட்டியிட இருப்பதாக கட்சி வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. அனேகமாக தென் கொழும்பு தேர்தல் தொகுதிக்கு பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசாவும் அவரின் மகன் சஜீத் பிரேமதாசா அம்பாந்தோட்டை தேர்தல் தொகுதியில் போட்டியிட இருப்பதாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# மலையக தமிழர் பிரச்சினை தீர்ப்போரையே ஆதரிப்போம்

**- இ. தொ. கா தலைவர் தொண்டமான்**

(கொழும்பு)

''எமது பிரச்சினைகளைத் தீர்க்கவும் எமது கோரிக்கைகளுக்கு முகம் கொடுக்கவும் பார் முன்வருகிறார்களோ அவர்களுடன் நாம் இணைந்து செயற்படவுள்ளோம்'' என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ், தொண்டமான் தெரிவித்துள்ளார்.

''நாட்டின்சனத்தொகையில் இந்திய வம்சாவளியினராகிய நாம்ஐந்துசதவீதமாகவே உள்ளோம். ஆகையால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடனோ நாம் இணைந்துதான் செயற்படவேண்டும். இது சம்பந்தமான தீர்மானததை விரைவில் மேற்கொள்ளவுள்ளோம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறும்போது சிறுபான்மை இன மக்களை ஒதுக்கிவிட்டு ஆட்சி அமைக்க முடியாது என்பதை நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் உணர்ந்து கொண்டிருக்கின்றனர். அண்மைக் காலமாக அவர்களது போக்கில் வித்தியாசம் ஏற்பட்டுள்ளதை உணரக் கூடியதாக உள்ளது. அத்தகைய சூழ்நிலையில் தான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து தீர்மானம் ஒன்றை முன்வைத்துள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சு வார்த்தையைத் தொடர்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தவறான பாதையில் செல்லமாட்டேன்

**சிறிலங்கா ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவிப்பு**

(கொழும்பு)

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவோ அல்லது ஆட்சியில் தொடர்ந்திருப்பதற்காகவோ நேர்மையற்ற குறுக்குப்பாதையில் தான் செல்ல விரும்பவில்லை என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

''அவ்வாறான தவறான பாதையில் நான் ஒருபோதும் செல்லமாட்டேன். எனவே ஒரு நேர்மையான அரசியலுக்கு மக்கள் கௌரவம் அளித்து மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை ஏற்படுத்துவார்கள் என நம்புகிறேன்'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

சென்ற சனிக்கிழமை பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின் மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், தாய் நாட்டுக்கு சமாதானமும் சௌபாக்கிய மானதுமான ஓர் எதிர் காலத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையினால் மட்டுமே ஏற்படுத்த முடியும். மக்கள் இது குறித்து எந்த சந்தேகமோ அன்றி சலனமோ கொள்ளத்தேவையில்லை.

மச்கள் எமது கடந்த கால நடவடிக்கைகளிலிருந்து இதனை உணர்ந்திருப்பார்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# கொழும்பில் புலிகளின் தாக்குதல் தடுத்துவிட்டோம்

(கொழும்பு)

கொழும்பில் விடுதலைப் புலிகள் நடத்தவிருந்த பாரிய தாக்குதல்கள் பலவற்றை தாம் தடுத்து நிறுத்தி விட்டதாக சிறிலங்கா குற்றப் புலன் விசாரணைப் பகுதியின் விசேட அதிகாரி ஒருவர் ''லங்காதீப'' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

முப்படையையும் சேர்ந்த பல அதிகாரிகளை கொலை செய்வதற்காக இருபத்தியிரண்டுபேர் அடங்கிய கரும் புலிகளின் தாக்குதல் குழுவொன்று கொழும்பில் ஊடுருவியிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

**வடபகுதி அரச அதிபர்கள்**

# பிரதேச செயலகங்களை மேற்பார்வை செய்வர்

(நமது நிருபர்)

வட பகுதியிலுள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளை மேற்பார்வை செய்யுமாறு அப்பகுதியிலுள்ள நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களை வட-கிழக்கு மாகாண சபை பிரதம பணிப்பாளர் திரு. கணேசநாதன் கேட்டுள்ளார்.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த அரசாங்க அதிபர்களே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் அதிகார பரவலாக்கல் நடைமுறையின்படி உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பிரதேச செயலகங்கள் ஆக்கப்பட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காலிங்க அபயவன்ச சு.கவில் சேர முடிவு

(கொழும்பு)

ஐ.தே. கவின்தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றிருந்த காலிங்க அபயவன்ச ஐ. தே. கவின் அடிப்படை உறுப்பினர் பதவி உட்பட அனைத்துப் பதவிகளிலுமிருந்து ராஜினாமா செய்வதாக கட்சித் தலைவர் டி.பி. விஜேதுங்காவிற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இவர் இன்று மேல்மாகாண முதலமைச்சரும். சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவியுமான திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை சந்தித்து சு. கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐ. தே. கவிலிருந்து விலகி சுதந்திரக் கட்சியுடன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஈழக் குறுநாவல் போட்டி

இப் போட்டியில் வெற்றி பெறும் குறு நாவல்கள் முதல் பத்தாயிரம், இரண்டாவது ஏழாயிரம், மூன்றாவது முறையே எட்டு நாவல்களுக்கும் ஆயிரம் ரூபா பணப்பரிசும் சுபமங்களாவில் பிரசுரிக்கப்படும்வாய்ப்பையும் பெறும் போட்டி விதிகள் யூன் சுபமங்களா இதழில். (8667)

### ஈழக் குறுநாவல் போட்டி

தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் சுபமங்களா சஞ்சிகை இணைந்து வழங்கும், ஈழக் குறுநாவல் போட்டி, முடிவு திகதி செப்டம்பர் 30ம் திகதி. குறு நாவல்களை தேசிய கலை இலக்கியப் பேரவை, 15/1 மின்சார நிலய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம். (8666)

### அதிபர்கள்கூட்டம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் நாளை புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யூனியன் கல்லூரியிலும் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

### தமிழ் விழா


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தமிழ்ச்சங்கத்தினர் நடாத்திய 1994 ஆம் ஆண்டுக்கான தமிழ்விழா கடந்த திங்கட் கிழமை வெகு சிறப்பாக நடந்தேறியது.

இவ் விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பரீட்சைக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் திரு. இ. முருகையன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்,

### இரிக்கட் சபைக்கு காமினி தலைவர்

இலங்கை கிரிக்கட் கட்டுப் பாட்டுச் சபையின் தலைவராக காமினி திசாநாயக்க நேற்று தெரிவு செய்யப்பட்டார். இவர் முன்னரும் இப்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2-ம் லெப். எல்லாளன் / அன்சார்


(யேசுதாசன் கனிஸ்ரஸ் பிலேந்திரன்)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 23-11-1970 | 28 06-1992 |

வாழ்வின் அர்த்தத்தை உன் இரத்தத்தால் எழுதிச் சென்றவனே - புலேந்தி, நாளை மலரும் ஈழம் உன் புகழ் பாடும். வரலாற்றில் உன் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்

உரும்பிராய் தெற்கு, உன் பிரிவால் வாடும்
(8660) அன்பு அம்மா, அண்ணா

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12. 05. 1941

மறைவு: 08. 07. 1993

## நினைவு கூருகின்றோம்..

### 28-06-1994

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - மூதூர், கூனித்தீவுப் பகுதியில் எமது முகாம் ஒன்றின் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் முத்துச்சாமி** (குமாரசூரியர் முரளிதரன் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

**லெப். சுதர்சன்** (பூபாலப்பிள்ளை சிவகுருநாதன் - ஆரையம்பதி - 01 - மட்டு)

**2 ம் லெப். கோபி** (நாகமணி ஆனந்தராசா - ஆரையம்பதி - மட்டு)

**மேஜர் கஜேந்திரன்** (சிங்காரவேல் சசிகரன் - 14 வித்தியாலய வீதி - திருமலை)

**கப்டன் சிறி-குளியா** (அப்புசாமி அன்பரசு - அரசடி - திருமலை)

**லெப். சுரேஸ்** (தங்கராசா இளங்கோ - ஆலங்கேணி கிண்ணியா - திருமலை)

**லொயிட்** (இருதயநாதன் வின்சன் ஜெகநாதன் - கோயில் வீதி - மூதூர் - 03)

**நிமால்** (செல்லையா நற்குணராசா - கட்டைபறிச்சான் - திருமலை)

**தாகூர்** (திருஞானசம்பந்தன் - கஜேந்திரராசா - ஏ. ஜி. ஏ. - ஒழுங்கை - வல்வெட்டித்துறை)

இதே முற்றுகையின்போது சிறிலங்கா இராணுவத்தினரால் அடித்துக் கொல்லப்பட்ட 09 தமிழர்கள்.

திருமலை - கூனித்தீவுப் பகுதியை முற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**கந்தையா ஏகாம்பரம்** (கூனித்தீவு - திருமலை)

1988ஆம் ஆண்டு மட்டு - 40ஆம் கிராமம் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த -

**குரு** (சித்திரவேல் சத்தியநாதன் - பக்கியெல்ல - மட்டு)

1939ஆம் ஆண்டு மிருசுவில், பழையவாய்க்கால் பகுதியில் தேசவிரோத சக்திகள் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் குட்டி-அக்பர்** (அருளம்பலம் குகபாலன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

பருத்தித்துறை - புலோலி, கந்தமுருகேசனார் சிலை அருகில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பெண், மற்றும் கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வீதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கோப்பாய் உதவி அரசாங்க அதிபர், ஆலய அர்ச்சகர் உட்பட 03 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**உமாகாந்** (கனகலிங்கம் நவரட்ணராஜா - டச்சுவீதி சாவகச்சேரி யாழ்)

யாழ் பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**தம்பி** (சிவசாமி சிவப்பிரகாசசுந்தரம் தம்பி - பிள்ளையார் கோயிலடி, மயிலிட்டி - யாழ்)

யாழ் - பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய -

**குமரன்** (சுப்பையா கனகராஜ் - உடங்கல் - நெடுங்கேணி - மணலாறு)

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**நித்திலன்** (சண்முகம் தேவகுமார் - முத்துமாளிகை புளியங்குளம் - வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**இன்பன்** (கனகு செல்வராசா 1-ம் படிவம், இராஜேந்திரன் குளம் - வவுனியா)

வவுனியா தாண்டிக்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**லெப். செந்தில்-மகேசன்** (சரவணன் மதனராசா - இரணைஇலுப்பைக்குளம் - வவுனியா)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் (மணலாறு, கொக்கிளாய்) படகில் செல்லுகையில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

புன்னாலைக்கட்டுவனில் பாரவண்டியொன்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 04 மாதக் குழந்தை.

1991ஆம் ஆண்டு திருமலை - தம்பலகமம், சூரன்

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



பேசும் கதையாய்
11 - 01 - 1971

போற்றும் விதையாய்
28 - 06 - 1992

### கப்டன் எல்லாளன் (ஒட்டேக்கா)

பொன்னுச்சாமி ஹரிதரன்

'' வல்வையில் வந்துதித்த மாவீரனே ''
ஆண்டு இரண்டு சென்றுவிட்டதடா இல்லை
என் கண்மணியே உனை மார்மீதும் தோள்மீதும்
சுமந்த எம் நெஞ்சு ஆறாத்துயர் கொள்ளுதடா
பெற்றவள் வாடுகிறாள் உடன் பிறந்த சகோதரிகள்
உனை இழந்து தவிக்கிறார்கள்.

உன் பிரிவால் துயருறும்,
'சிவகுரு வாசம்' ஐயா, அம்மா, அக்கா, தங்கை,
அம்மன் கோயிலடி, அம்மாச்சி அப்பாச்சி, மற்றும்
வல்வெட்டித்துறை. (8646) குடும்பத்தினர்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

டார். இவர் முன்னரும் இப் பதவியை வகித்துவந்தார்.

இதேவேளை கொழும்பு கெத்தாராம சர்வதேச கிரிக்கட் விளையாட்டரங்கிற்கு ஆர் பிரேமதாசா சர்வதேசக் கிரிக்கட் அரங்கு என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## மலத்தீன் தெளிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் மலத்தீன் தெளிக்கும் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இப்பகுதி மக்கள் சுகாதாரத் திணைக்களத்திற்கு விடுத்த கோரிக்கைகளையடுத்தே இம்மலத்தீன் தெளிக்கும் நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன-



## சிதம்பரி மகேந்திரன்

(முன்னைநாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

குன்றின் விளக்காய்; குவலயம் - போற்ற வாழ்ந்து;
பதவிகள் பலவும் பெற்று; - பலராலும் புகழப்பெற்று;
தனிமையாய் எம்மைவிட்டு; தனியுலகு சென்றதேனோ?
காலன் கொடியவன்; ஐயா! கண்ணிலே குத்திவிட்டான்;
கலங்குகின்றோம் நாங்கள் - கதியேதுமின்றி!
உங்கள நினைவலைகள் உள்ளத்தை வாட்டுதையா:
உயிரிலா உடலைப் போலே உலகினில் வாழுகின்றோம்!
எங்கள் அன்புத்தந்தையின்! அருமைத் தலைவனின்!
ஆன்மாசாந்தி பெற
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நாகம்மாள் வீதி, உடுவில் — மனைவி, பிள்ளைகள், (8664) மருமகன், பேரப்பிள்ளைகள்.


மாணவர்களே! வாசகர்களே!!

நீங்கள் பாவித்த புத்தாங்கள், கொப்பிகள், பத்திரிகைகள், தாள்கள் போன்றவற்றை
நியாயமான விலையில் உங்களிடம் கொள்வனவு செய்ய நீங்கள்
நாடவேண்டிய இடம்

★ யாழ். பழைய புத்தகக் கடை ★

இவை மட்டுமா!!!
இங்கு-

நாவல்கள், சமயசாஸ்திர நூல்கள், மற்றும் பாடப்புத்தகங்கள்,
சஞ்சிகைகள், பத்திரிகைகள், கொப்பிகள், இன்னும் பலவும்
மலிவு விலையில் விற்கப்படும்

உங்கள் படிப்பைத் தொடர்ந்து செல்ல
உங்களுக்குக் கை கொடுத்து உதவும்

யாழ். பழைய புத்தகக் கடை

யாழ். நகரில் நீங்கள் வாங்கவும் விற்கவும் நாட வேண்டிய
தனிப்பெரும் நிறுவனமுமாகும்

யாழ். பழைய புத்தகக் கடை
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(8663)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வி. ஏகாம்பரமூர்த்தி

(அதிபர் யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலை)

தோற்றம்: 25. 04. 1944 — மறைவு: 01. 07. 1991

திதி: 28- 06- 1994

பொன்பொலியும் அராலியூர் தன்னில் தோன்றி
புகழ்பூத்த மூளாயில் வாழ்க்கை தாங்கி
அன்புவளர் பெண்பத்ம ராணி தன்னொ
டாலயங்கள் வழிபட்டு வேத நீதி
இன்பநுகர்ந் திதிகாசம் புராணம், பக்தி
இசைந்ததிரு முறையுணர்ந்து, ஞானி யாகி
துன்பபவம் தீர்த்திட்ட ஏகாம்பர மூர்த்தித்
தூயவனே சிவசோதி சூழ்ந்து வாழி.

'இன்பலனை'
மூளாய்,
சுழிபுரம்.
அரசினர் வைத்தியசாலை
மல்லாவி.

மனைவி, மாமனார்,
சகலன்மார், மைத்துனிமார்,
பெறாமக்கள்.

(8653)

1991ஆம் ஆண்டு திருமலை - தம்பலகமம், சூரன்கல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**கரிகரன்** (வடிவேல் சின்னராசா - முள்ளிப்பொத்தானை, தம்பலகமம் - திருமலை)

**ராஜ்குமார்** (அருணாசலம் சிவராசா - 3-ம் வட்டாரம், ஆலங்கேணி - திருமலை)

**சந்திரசேகரம்** (தெய்வேந்திரம் யோகன் - வெருகல், மூதூர் - திருமலை)

வவுனியா பேயாடிகூழாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் வதனன்** (கந்தசாமி இராமச்சந்திரன் - 4-ம் படிவம், பாவற்குளம் - வவுனியா)

1992ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பலவேகய - 2' நடவடிக்கையின்போது புல்லாவெளியில் நிகழ்ந்த சமரில் வீரச்சாவெய்திய -

**கலைஞன்-நசீர்** (செல்வநாயகம் ரஞ்சன் - புதுக்குடியிருப்பு - மட்டு)

**இளங்கதிர்-சூரியகுமார்** (சின்னராசா பத்மநாதன் - ஐயங்கேணி - மட்டு)

**கப்டன் வீரமணி** (கணேசபிள்ளை சந்திரசேகரம் - கண்ணகிபுரம், உவர்மலை - திருமலை)

**லெப். வெற்றி** (கனகலிங்கம் அருள்நேசன் - மாசார் - பளை)

**கப்டன் எல்லாளன்-ஒட்டேகா** (பொன்னுச்சாமி ஹரிதரன் - அம்மன் கோயிலடி - வல்வெட்டித்துறை)

**2-ம் லெப். எல்லாளன்-அன்சார்** (யேசுதாசன் களிஸ்ரஸ் பிலேந்திரன் - உரும்பிராய் தெற்கு - யாழ்)

**2-ம் லெப். கபில்** (பாலசிங்கம் முரளிதரன் - டச்சு வீதி, அளவெட்டி - யாழ்)

**வீரமணி-தீபன்ராஜ்** (குணரத்தினம் சிறீரஞ்சன் - அரசடி ஒழுங்கை, மட்டுவில் - சாவகச்சேரி)

மட்டு - கள்ளியந்தீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். தங்கேஸ்** (ஏரம்பு தேவகுமார் - குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி - மட்டு)

மட்டு - வாகரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

பளை - பச்சிலைப்பள்ளிப் பகுதியில் விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட நீர்வேலியைச் சேர்ந்த விறகு வியாபாரி-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9886)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு..

வீதியில் முட்களை தூவுபவன் வெறுங்காலில் செல்லக் கூடாது.

-பெஞ்சமின் பிராங்களின்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 28-06-94

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண்- 05


# தேர்தல் ஆணையாளரின் நம்பிக்கை

“பொதுத் தேர்தலில் நியாயமான சுயாதீனமான வாக்குப் பதிவு நடைபெறுமென நான் நம்புகிறேன்” என்ற தேர்தல் ஆணையாளரின் கூற்று எதன் அடிப்படையிலானது என்பது இன்றைய நிலையில் கேள்விக்குரியதே. இதில் பரிதாபத்திற்குரிய தென்னவென்றால் தேர்தலை நியாயமானதாகவும் சுயாதீனமானதாகவும் நடத்த வேண்டிய தேர்தல் ஆணையாளர் அது குறித்து நம்பிக்கை மட்டும் வெளியிட்டுள்ளமையாகும்.

மறுவளமாகத் தேர்தல் ஆணையாளரின் இக்கூற்றுக்களே தேர்தல் நியாயமானதாகவும் சுயாதீனமானதாகவும் நடைபெறுமா என்பதில் அவர் கொண்டுள்ள சந்தேகத்தை வெளிப்படுத்துபவையாகவுள்ளன. அத்தோடு தேர்தல் சுயாதீனமாகவும், ஜனநாயக வரைமுறைக்கு உட்பட்டும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டிருப்பினும் யதார்த்தத்திற்கு புறம்பான ரீதியில் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பது தேர்தல் ஆணையாளரின் நேர்மை, நடுநிலைமை என்பனவற்றைச் சந்தேகிக்கவும் வைக்கின்றது.

இவ்வாறானதொரு சந்தேகம் உருவாவதில் நியாயம் இல்லாமல் இல்லை. ஏனெனில் வடக்கு - கிழக்கில் தேர்தல் ஒன்று நடத்துவதற்கான அரசியல், இராணுவ - பாதுகாப்பு - சூழ்நிலை தற்பொழுது இல்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். இந்நிலையில் நியாயமான தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளமையானது தேர்தல் முறையையே கேலி செய்வதாகும்.

இன்றையநிலையில் வடக்கு - கிழக்கில் தேர்தல் ஒன்றை நடத்துவதென்பது மோசடிகள் மூலமே மேற்கொள்ள முடியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இந்நிலையில், தேர்தல் ஆணையாளர் கூறியிருப்பதுபோல் நியாயமான தேர்தலை வடக்கு - கிழக்கில் நடத்த முடியாது. சிலவேளை ஒரு மோசடியற்ற தேர்தலை தெற்கில் வேண்டுமானால் நடத்துவதற்கு முற்படலாம்.

# ஐ. தே. க. உட்பூசல்கள் தீர்ந்து விட்டன

### வெற்றி நிச்சயம் என்கிறார் கூரே

(கொழும்பு)

ஐ. தே. கவினுள் இப்போது சர்ச்சைசக்கோ, கருத்து பேதங்களுக்கோ, நெருக்கடிகளுக்கோ இடமில்லை எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ. தே. க அடையப்போகும் வெற்றிகளினால் எதிர்க்கட்சிகள் திகைக்கப்போகின்றன என சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடையே பேசிய அவர், ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளையும், திட்டங்களையும், முழுமையாகவும், தீவிரமாகவும் தொடர்ந்து செயற்படுத்தப் போவதாக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா எமக்கு உறுதியளித்துள்ளார். எனவே சில மாதங்களுக்கு முன்பிருந்த ஐயப்பாடுகளும் சந்தேகங்களும் அறவே அகன்றுவிட்டன. பிரேமதாசா கொள்கைகள் அரசின் கொள்கைகளாக ஏற்கப்பட்டு விட்டன என கூரே குறிப்பிட்டார்.

# ஜனாதிபதி விஜேதுங்கா சிறந்த மாலுமியாம்

### டிரோன் பெர்னான்டோ கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டில் கொந்தளிப்பு ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட ஒரு சூழலில் பதவியேற்ற ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஒரு சிறந்த மாலுமி. எப்படிக் கப்பலைக் கரையேற்றுவாரோ அதேபோல அரசாங்கத்தையும், மக்களையும் வெற்றிகரமாக வழிநடத்தி மற்றுமொரு தேர்தலுக்கான சூழலை உருவாக்கியுள்ளார், இவ்வாறு தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவிசாவளைப்பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தை தொடர்ந்து நாட்டில் அமைதியையும், உறுதி நிலையையும் பேணியமைக்காக நாட்டு மக்கள் அனைவரும் டி. பி. விஜேதுங்காவிற்கு நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# சிறுத்தைப் புலித் தோலை கடத்த முயன்றவர் கைது

(கொழும்பு)

‘பற்றிக்’ உடுதுணிகளுடன் சிறுத்தைப்புலித் தோல்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி பணம் சம்பாதித்து வந்ததாகக் கூறப்படும் மாத்தளைப் பகுதி கோடீஸ்வரர் ஒருவரை குற்றப் புலனாய்வுப்பிரிவுப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

மாத்தளைக் காட்டுப் பகுதியிலுள்ள சிறுத்தைப் புலிகளைப் பிடிப்பதற்காகவேண்டி இவர் இப்பகுதியில் போலி சேனைப் பயிர்ச் செய்கையை நடத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது.

பொலிஸ்மா அதிபருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின்படி பொலிஸ் கோஷ்டி மேற்படி கோடீஸ்வரரின் வீட்டை முற்றுகையிட்ட போது அங்கிருந்து ஐந்து சிறுத்தைப் புலிகளின் தோல்களைக் கைப்பற்றினர்.

வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் ஒரு சிறுத்தைப் புலித் தோலுக்கு ஒரு இலட்சம் ரூபா வரையில் பணம் கிடைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி முதலான நாடுகளுக்கே மேற்படி சிறுத்தைப் புலித் தோல்களை இவர்களவாக அனுப்பிப் பணம் சம்பாதித்து வந்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

இவரின் ஆலோசனையின் பேரில் போலி சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளோர் பெருங்காடுகளில் உள்ள சிறுத்தைப்புலிகளைக் கொன்று அதன்தோல்களைப் பதப்படுத்துவதில் ஈடுபடுவார்களாம்.

உடுதுணிகளுடன் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்த இந்த சிறுத்தைப்புலித் தோல்கள் சுங்கப் பகுதியினரின் கண்களில்படாமல் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனவா? அல்லது இதற்கு சுங்கப்பகுதியிலும் எவரும் துணையிருந்தனரா? என்பது குறித்தும் விசாரணை நடைபெறுகிறது.

# பிரச்சினைக்கு இன்றைய அரசியல் வாதிகளே காரணம்

### - பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா

(கொழும்பு)

எம்மில் ஒரு சிறு தொகையினர் செய்யும் சில தவறுகளுக்காக ஒரு இனத்தையே தவறாககருதவோ வெறுக்கவோ கூடாது இந்நாட்டில் தோன்றியுள்ள பிரச்சினைகள் அனைத்திற்கும் அரசியல் வாதிகளே பொறுப்பேற்க வேண்டும் என பிரதிசபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற இந்து மத நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், நாட்டியம், இசை, நாடகம் ஆகிய கலைநுணுக்கங்கள் அனைத்தையும் உங்களிடமிருந்தே நாம் கற்றுக் கொண்டோம் என்பதை நன்றியோடு இங்கு கூறுகிறேன். அதே சமயம் உங்கள் நாட்டில் பிறந்த பௌத்த மதத்தையும் அதன் அருமையான தத்துவங்களையும் நீங்கள் மறந்து வரும் வேளை நாம் அவற்றை சிறப்பாக வளர்த்துவருகிறோம் என்பதையும் கூறவிரும்புகிறேன். அந்நியோன்யமாக வாழ்ந்த எமக்கிடையே பாரிய இடைவெளியொன்று இன்று ஏற்பட்டுவிட்டது எமது துரதிர்ஷ்டமே எனவும் காமினி பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினை தீர்வுத்திட்டம் நூல் வடிவில் வெளிவரும்

### சுதந்திரக் கட்சி எம். பி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு பிரச்சினையை தீர்க்க எம்மிடம் திட்டம் ஒன்று தயாராகி வருகிறது. எந்த வகையிலும் யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இத்திட்டம் அமையும் வெகுவிரைவில் அது புத்தக வடிவமாக வெளிவரவுள்ளது இவ்வாறு சுதந்திரக்கட்சி எம்.பி ஏ. எம் சம்சுதீன் கூறினார்.

கல்முனையில் மகளிர்வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், விடுதலைப் புலிகள் தலைவர் வே பிரபாகரனுடன் பேசவதற்காக எமது கட்சியின் பிரதித் தலைவி சந்திரிகா தனது கணவருடன் அன்று வவுனியா காட்டிற்கு சென்றார். எப்படியாவது பிரச்சினையை தீர்த்துவைக்க வேண்டும் என்பது அவரது எண்ணம் என மேலும் தெரிவித்தார்.

இன்னும் நான்கு மாதங்களில் இன்றைய ஐ. தே. க ஆட்சி தூக்கியெறியப்பட்டு எமது புதிய ஆட்சி அமையும். அப்போது நாட்டின் தற்போதைய பிரச்சினைக்கான தீர்வுதிட்டத்தை வெளியிடுவோம். கடந்த 17 வருடத்தில் அழிவின் அழிவு ஆயிரக்கணக்கில் இளைஞர் காணாமற்போயினர். பலர் அகதிகளாகினர். நாடு தளம்பல் நிலைக்கு வந்துவிட்டது ஆட்சிமாற வேண்டிய நேரம் வந்துவிட்டது. தேர்தல் நெருங்க அரசு பல திட்டங்களை முன்வைத்தது. உணவு விலைகளை குறைத்தது. பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குகிறது. இனப்பிரச்சினை தீர்க்கு மதத்தலைவர்களின் ஆலோசனையை கோருகிறது. இதையெல்லாம் 17 வருடகாலத்தில் ஏன் செய்யவில்லை இனியும் மக்கள் ஏமாறமாட்டார்கள் என்றும் சம்சுதீன் எம்.பி குறிப்பிட்டார்.

# பொது ஜன ஐக்கிய முன்னணி தேர்தலுக்கு தயாராகிவிட்டது

### சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி இப்பாராளுமன்ற தேர்தலை முகம் கொடுக்க தயாராக இருப்பதாகவும் ஏற்கனவே தேர்தல் தொடர்பாக நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வந்ததாக சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. ஸி சிங்கள சேவைக்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் ஆறு ஹெலஉறுமய அங்கத்த... யேறியதும்கட்சிமேலும் புனிதப்படுத்தப்பட்டதாகவும் தமது கட்சிக்கு இது வரை இனவாத கட்சி என குத்தப்பட்ட முத்திரை தற்போது அகன்று விட்டதாக தெரிவித்தார்.

ஆனால் தமது கட்சி ஆரம்பத்தில் இருந்து இனவாத கட்சியாக செயற்படவில்லையென்றும் மறைந்த பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கட்சிக் கொள்கைகளை வகுக்கும் போது பெரும்பான்மை மக்களைப் போன்று சிறுபான்மை மக்க... தெரிவித்தார்.

ஆனால், சில குழுவினர் அரசியல் இலாபத்தை மையமாக கொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பௌத்த வாத சிங்கள கட்சி என்ற நிலைமைக்கு கொண்டு வர முயற்சி செய்தார்கள். எனினும் எமது கட்சி இதில் இருந்து தற்போது விடுதலை பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

சிறிமாவின்ஆலோசனையின் கீழ் சந்திரிகா குமாரணதுங்கா தலைமையில் கட்சி பிரசார நடவடிக்கைகளை மேற்...

தேர்தலை தெற்கில் வேண்டுமானால் நடத்துவ தற்கு முற்படலாம்.

வடக்கில் பெரும் நிலப்பரப்பும், பெருமளவு மக்களும் வாழும் இடங்களில் தேர்தல் நடத்துவதற்கான சூழ் நிலைகள் இருப்பதாக இல்லை. இது புதிதாக ஏற்பட்டுள்ள சூழ் நிலையும் அல்ல: எவரும் விளங்கிக் கொள்ள முடியாததும் அல்ல. இதனை அரசாங்கமும் தெளிவாகவே உணர்ந்து உள்ளது.

இதனை உணர்ந்தே வடக்கில் தேர்தல் நடத்துவதற்கென அரசாங்கம் குறுக்கு வழிகளைத் தேடிவருகின்றது இதற்கென யாழ் மாவட்டச் செயலகத்தை மாற்றுவதற்கும், வாக்களிப்பு நிலையங்களை மாற்றுவதற்கும் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதோடு அதற்கு அரசியல் அமைப்பு சட்ட விதிகளில் ஓட்டைகளையும் தேடிக்கொண்டு இருக்கின்றது.

இதற்கான ஓட்டைகள் சிலவற்றை அரசாங்கம் கண்டுபிடித்துள்ளதாகவும் தெரிகின்றது. இதன்படி யாழ் மாவட்டத்தில் இருக்கவேண்டிய சுமார் 400 வாக்களிப்பு நிலையங்களை ஒருங்கிணைப்பதற்கு அரசியல்யாப்புச் சட்டத்தில் இடம் இருப்பதாக அரசியலமைப்பு விவகார துறை அமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

அதாவது, வடக்கிலும், கிழக்கிலும் தேர்தலை நடத்துவதற்காக அரசாங்கம் ஓட்டைகளை தேடிக்கொண்டிருக்கின்றது. அரசியல் அமைப்பு ஓட்டைகள் ஊடாக மோசமான தேர்தல் ஒன்றை நடத்தவே அரசாங்கம் தயாராகி வருவது வெளிப்படையாகத் தெரிகிறது. இ நிலையில் நியாய பூர்வமான தேர்தல் நடக்கும் என தேர்தல் ஆணையாளர் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்

சிலசமயம், கடந்த கால நிகழ்வுகளை விடத் தற்போதைய சூழ்நிலை அவருக்கு ஒப்பீட்டு ரீதியில் முன்னேற்றகரமானதாக இருக்கலாம். ஏனெனில் 1988 இல் ஜனாதிபதித் தேர்தலின் போதும் 1989இல் பாராளுமன்றத் தேர்தலின் போது தென்னிலங்கையில் இன்றிருப்பதைவிட நிலைமைமிகவும்மோசமானதாகஇருந்தது ஆனால், படுகொலைகள், வன்முறைகள் மத்தியில் நடைபெற்ற அத்தேர்தல்களும் தேர்தல் திணைக்களத்தினாலும், தேர்தல் ஆணையாளராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டே இருந்தன. அப்பொழுதும் தற்போதைய தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவே ஆணையாளராக இருந்தார்.

ஆகையினால் தற்போதைய சூழ் நிலையைச் சாதகமானஒரு சூழ்நிலையாக ஏற்றுக்கொண்டு தேர்தல் சீராக இடம் பெறும் என அவர் எதிர்பார்ப்பது அவரைப் பொறுத்து ஏற்புடையதாக இருக்கலாம் ஆனால், இது ஒருபோதும் ஜனநாயகத் தேர்தல்முறைக்குள் உள்ளடங்கும் ஒன்றாக ஏற்றுக்கொள்ள முடியாது. அவசர காலச்சட்டத்திற்குள்ளும் இராணுவக் கெடுபிடி குள்ளும் தேர்தல் நடத்துவது சிறிலங்காவிற்கே தனித்துவமாக இருக்க முடியும்.

---

ப்படும் ஒரு சிறுத்தைப் புலித் தோலுக்கு ஒரு இலட்சம் ரூபா வரையில் பணம் கிடைப்

குறித்தும் விசாரணை நடைபெறுகிறது.

தெரிவிக்கையில், அண்மையில் ஆறு ஹெலஉறுமய அங்கத்தவர்கள் கட்சியை விட்டு வெளி

பெரும்பான்மை மக்களைப் போன்று சிறுபான்மை மக்களின் நலன்களிலும் அக்கறை கொண்டிருந்தார் எனவும்

தலைமையில் கட்சி பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார்.

---

# உலக உதைபந்தாட்டம்; ரசிகர்களினால் கலகம்

## வாகனம் தீக்கிரை; இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு

(வாஷிங்டன்)

தற்போது அமெரிக்காவில் நடைபெற்று வரும் உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தின் விளைவாக போட்டியில் பங்கு பற்றும் அணிகளின் நாடுகளில் பெரும் கலகங்களும் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் பிரேசிலுக்கும் ரஷ்யாவிற்கும் இடையே நடைபெற்ற போட்டியின் போது பிரேசிலின் அமேசன் நகரில் இரசிகர்கள் தொலைக்காட்சியில் அப்போட்டியை பார்வையிட்டுக் கொண்டிருந்த வேளை திடீரென மின்தடை ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் கொண்ட இவர்கள் பெரும் கலவரத்தில் இறங்கியதையடுத்துபொலிசார்அழைக்கப்பட்டனர். மின்தடை ஏற்பட்டதையடுத்து வீடுகளை விட்டு வெளியே வந்த ஆயிரத்திற்கும்மேற்பட்டோர் நகரமேயரின் அலுவலகத்திற்கு கல்லெறிந்தனர். மின்சாரசபை வாகனமொன்று தீக்கிரையாக்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக அறுவர் கைதாகியுள்ளனர்.

மற்றுமோர் போட்டியில் பெல்ஜியம் மொரோக்கோவைத்தோற்கடித்த போது பெல்ஜியம்நகரில் நடந்த வெற்றிக்கொண்டாட்டம் வன்முறையாகி நடந்த துப்பாக்கிச் சூட்டில் மொரோக்கோ இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இதைத்தொடர்ந்து பெல்ஜியவாசிகளுக்கும் அந்நகரில் வாழும் மொரோக்கோ வாசிகளுக்கும் இடையில் பெரும் கலகம் நடைபெற்றது கலகத்தை தடுக்க 500 பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

உலகக்கிண்ண உதைபந்தாட்டம்

# அமெரிக்க அணியை ருமேனியா தோற்கடிப்பு

(வாஷிங்டன்)

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் அமெரிக்க அணியை ருமேனியா 1- 0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது. இதன் மூலம் ருமேனியாவும் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. அமெரிக்காஇத்தகுதியைஇழந்துவிட்டது.

மற்றுமோர் ஆட்டத்தில் பல்கேரியா - கிரேக்கஅணியை 4- 0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது கொலம்பியா சுவிஸர்லாந்து அணிகளிடையிலான போட்டியில் கொலம்பியா 2- 0 என்ற கோல் கணக்கில் சுவிஸ் அணியை தோல்வியுறச் செய்தது. எனினும் சுவிஸ் அணி இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியன் எயர்லைன்ஸில் மது அருந்தத் தடை

(டில்லி)

இந்தியாவில் இந்தியன் எயர் லைன்ஸ் மற்றும் தனியார்விமானங்களில் மதுபான வகைகள் வழங்கப்படுவதற்கும், பாவிக்கப் படுவதற்கும் தடை விதிக்கப் படுவதாக மத்திய அமைச்சர் குலாம் நபி. ஆசாத் நேற்றுத் தெரிவித்தார்.

இந்த தடை உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருவதாகத் தெரிவித்த அவர்,விமான பயணிகளையும், விமானங்களையும் பத்திரமாக பாதுகாப்பதற்கு இந்த உத்தரவை தவிர வேறு வழியில்லை எனவும் குறிப்பிட்டார்.

# எல். பி. வாயுவில் இயங்கும் வாகனம் அறிமுகமாகும்

## தனியார் நிறுவனம் முயற்சி

(கொழும்பு)

திரவப் பெற்றோல் வாயுவில் (எல். பி. காஸ்) இயங்கும் வாகனங்களை இலங்கையில் அறிமுகம் செய்ய தனியார் நிறுவனம் ஒன்று நடவடிக்கை எடுத்துள்ளது.

எரிவாயுவில் இயங்கும் வாகனத்தில் வாயுக் கொள்கலன்கள் பொருத்தப்படுகின்றன. எல். பி வாயுவை எரிபொருளாக பயன்படுத்தியே இவ் வாகனம் இயங்கும். இவ் வாகனங்கள் எல். பி. வாயுவில் ஓடுவதால் பெற்றோல், டீசலில் ஓடும் வாகனங்களை விட குறைந்த அளவிலேயே நைதரசன் ஒட்சைட்டு, ஈயம் போன்ற நச்சுப்பதார்த்தங்கள் வெளியிடப்படும்.

இவ்வாகனங்களை அறிமுகம் செய்யும் தனியார் நிறுவனம் எல். பி. வாயுவினால் பெற்றோலை விட 63 சதவீத எரிபொருள் செலவை மீதப்படுத்தலாம் எனக் குறிப்பிட்டுள்ளது. இதே சமயம் பெற்றோலில் இயங்கும் வாகனத்தை எல். பி வாயுவில் இயங்கும் வாகனமாக மாற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது இதன்போது அதன் பெற்றோல் கொள்கலனுக்கு மேலதிகமாக எரிவாயு கொள்கலன் பொருத்தப்படும். அத்துடன் இயந்திரத்திலும் மின்னியல் கருவியொன்று பொருத்தப்படும். இதனால் வாகனம் ஓடிக் கொண்டிருக்கும் போதே விரும்பியபடி வாகனத்தை எரிவாயுவுக்கும் பெற்றோலுக்கும் மாற்றலாம்.

நான்கு ஸ்டிறோக் இயந்திர வாகனம் எதிலும் எரிவாயு கொள்கலன் பொருத்தப்படலாம். இம் முயற்சிக்காக தனியார் நிறுவனம் இத்தாலிய நிறுவனம் ஒன்றுடன் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

எல். பி வாயு வாகனம் 1965 இல் கண்டுபிடிக்கப்பட்டது. உலகெங்கும் இன்று 10 மில்லியன் எரிவாயு வாகனங்கள் உள்ளன.

---

## புலிகளின் குரல்
### நிகழ்ச்சி நிரல்

**1994- 06- 28**
**செவ்வாய் இரவு**

08. 01- ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08. 10- அறிந்துகொள்ளுங்கள் தகவற்களஞ்சியம்
08. 20- நலந்தானா? பி. எனப்படுகின்ற காசநோய் ஏற்படுவதற்கான காரணங்களும் அதற்கான ஆலோசனைகளும்
08. 30 - செய்திகள்
08. 40- கருத்துக்களம் ''பாதுகாப்பு''
08. 50- களமும் கானமும் ''உரிமைகள் மறுக்கப்படுகின்றன''

**1994- 06- 29**
**புதன் காலை**

07. 02- மாவீரவணக்கம்
07. 15- நீங்கள் கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# விருது புறக்கணிக்கப்பட்ட அதிகாரிகள் முறையிடலாம்

## மேஜர் ஜெனரல் தலைமையில் ஓர் அமைப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு படையினரில் கௌரவம் மற்றும் விருது வழங்கல் மறுக்கப்பட்ட அதிகாரிகள் தமது முறைப்பாடுகளை இப்போது தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேஜர் ஜெனரல் ஏ. எம். யு. செனவிரத்தினா தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள உயர் அதிகாரமுடைய குழுவொன்று இம் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவிற்கு அக்டோபர் முதலாம் திகதி வரை படை அதிகாரிகள் தமது முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம் எனவும் தெரிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் மேஜர் ஜெனரல் செனவிரத்தினா வுடன் பிரிகேடியர்கள் எஸ். எச். ஹப்பு ஆராச்சி, எஸ். டி. டி. ஜயசுந்தர, சரத்பெரேரா, அன்ரன் விஜேந்திரா ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

முறைப்பாடுகளைப் பரிசீலித்து உரிய சிபார்சுகளை வழங்க இக் குழு அதிகாரமுடையதாக இருக்கும். யுத்தத்தில் உண்மையான நாயகர்கள் கௌரவிக்கப்படவில்லை என்று படையினர் மத்தியில் எழுந்த அதிருப்தியை அடுத்து இக் குழு நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை 1982 முதல் 1993 டிசம்பர் 31 வரையான யுத்தத்தில் சாகசச் செயல்களுக்காக கௌரவிக்கப்பட வேண்டியவர்களைக் குறித்து சிபார்சு செய்வதற்காக மேஜர் ஜெனரல் ரோஹான் எஸ். தலுவத்த தலைமையில் மற்றுமொரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவில் பிரிகேடியர்கள் தேவிந்த கலுபஹான, நெயில் டயஸ், கே. ஏ. எம். ஸி. குலரத்னா, மற்றும் ஆர். பி. லியனகே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இக் குழுக்களுக்கு முறைப்பாடு மற்றும் சிபார்சுகளை மேற் கொள்வது தொடர்பாக மூத்த பிரிகேடியர் ஒருவர் படையினருக்கான அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

28 - 06 - 94



### செல்வன் ரதூசன் யோகநாதன்

கச்சாய் தெற்கைச் சேர்ந்த யோகநாதன் கமலாசனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரதூசன் தனது முதலாவது பிறந்த நாளை (28-06-94) இன்று தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, கனடாவிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, ஆசையம்மம்மா, பெரிய சித்தி, அச்சுவேலி பேபிமாமி, மாமா சித்தப்பா சித்தி குடும்பத்தினர் குளியாப்பிட்டி பெரியமாமி மாமா குடும்பத்தினர், கொழும்பு துரைமாமா குடும்பத்தினர், ராணிச்சித்தி சித்தப்பா, ஜேர்மனியிலுள்ள தேவிப் பெரியம்மா, கமலாப்பெரியம்மா, றஞ்சிச் சித்தி, ரதிச் சித்தி, இந்திரன் மாமா, கீதன் மாமா, றூபிச் சித்தி, மகாச்சித்தி, ராஜன் மாமா, நிதிச் சித்தி குடும்பத்தினர், கனடாவிலுள்ள பபா மாமி மாமா, பெரிய சித்தப்பா சித்தி குடும்பத்தினர், சித்தப்பா சுவிஸ் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர் ஆகியோர் எல்லாம் வல்ல கச்சாய் கண்ணகை அம்மாள் திருவருள் பெற்று பல்கலையும் பெற்றுசீரும் சிறப்புடனும் நலமாக வாழ வாழ்த்துகின்றனர்.

ப. யோகநாதன்
(தகப்பன்)

(8662)

## ஆங்கில தினவிழா

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தின் ஆங்கில தினவிழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய அதிபர் செல்வி கி. வீரசிங்கம் தலைமையில் இடம்பெறும். (24)

## ஆட்சியைக்

கள என எண்ணியே முதன் முதலாக மக்கள் முன்னே செல்வதற்கு தீர்மானித்தேன் என தெரிவித்தார்.

## பிரேமாவின்

வும் அவ்வட்டாரங்கள்மேலும் தெரிவித்துள்ளன.

இதே வேளை இத் தகவல் வெளிவந்ததைத் தொடர்ந்து சஜீத்பிரேமதாசாவிடம் கருத்துப் பெற தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது தான் இது குறித்து கருத்து எதனையும் தெரிவிக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

# வெளிச்சம் மாத இதழ் இன்று வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் - கலை, இலக்கிய சமூக இதழ் - ஆனி மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் கருத்துத் தொகுப்பிலிருந்து சில சிந்தனைத் தெறிப்புகளும் பிரம்மஞானியின் 'கடவுளின் மரணம்' என்ற கட்டுரையும் இடம்பெறுகின்றன. இவற்றுடன் மாலிகாவின் முன்பக்கக் கவிதையும், புதுவை இரத்தினதுரை, மு. வே. யோ வாஞ்சிநாதன், இளந்திரையன் ஆகியோரின் கவிதைகளும் உள்ளன. பண்டிதர் வீ. பரந்தாமனுடனான நேர்காணலும், 'இசையின் நான்காவது பரிமாணம்' என்ற கட்டுரையும் க. சட்டநாதனின் சிறுகதையும் கரும்புலிகள் நினைவுப் பாடல் ஒன்றும், 'வெளிச்சம் வெள்ளி இதழ்' பற்றி வவுனியா திலீபன் எழுதிய குறிப்புகளும் இந்த இதழில் இடம் பெறுகின்றன.

இது வெளிச்சத்தின் இருபத்தியாறாவது இதழாகும்.

## இராணுவ

துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்காவும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் திரு. கே. என். சொக்சியும் ஜனாதிபதியுடன் உடனிருந்தனர்.

யாழ் மாவட்டத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் விரும்புகிறது தேர்தல் நடத்தப்படக் கூடிய இடங்களில் தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென்பதே அரசியலமைப்புவிதியாகும் என மேலும் அவர் தெரிவித்தார்

## பிரதேச

பிரதேச செயலர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

வட மாகாணத்தின் இந்த நான்குமாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களிலுள்ளபெரும்பாலான உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகள் பிரதேச செயலர் பிரிவுகளாக மாற்றப்பட்டு பிரதேச செயலர்களும் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு மேலதிக அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது மற்றைய மாவட்டங்களைப் போன்று வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகலமாவட்டங்களிலும் இருக்கும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளையும் வடக்கு கிழக்கு மாகாணசபை பிரதேச செயலகங்களாக மாற்றி அவர்களுக்கு அதிகாரங்களையும் வழங்கியது. ஆனால் யாழ். அரச அதிபருக்கு வடக்கு கிழக்கு மாகாண சபை பிரதம பணிப்பாளரிடமிருந்து நேற்று வந்த அறி

## கருத்தரங்கு

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வுக்கான செயன் முறைத் தேர்வுகள் யூலை மாத பின்னரைப் பகுதியில் நடைபெறவுள்ளன. இவற்றுக்கான விளக்கமளித்தல் கருத்தரங்குகள் அப் பாடங்களுக்கான முதன்மை யாசிரியர்களுக்கு அவ்வப் பாடத்துக்கான கல்விப் பணிப்பாளர்களால் நடத்தப்படவுள்ளன. தொழில் நுட்பப் பாடங்களுக்கான முதன்மை யாசிரியர்கள் நாளை நல்லூர் கல்வித் திணைக்களத்தில் உள்ள தேர்வுக் கிளை மண்டபத்தில் பிற்பகல் 2 00 மணிக்குக்கூடுமாறு வலயங்கள் இரண்டினையும் சேர்ந்த முதன்மை ஆசிரியர்களை தேர்வு ஆணையாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் கேட்டுக் கொள்கிறார். விஞ்ஞானம், அழகியல் பாடங்களுக்கான கருத்தரங்குகள் முறையே 8-07-94 யா/ சுனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 9 00 மணிக்கும் 6-07-94 இல் தேர்வுக்கிளை மண்டபத்தில் காலை 9.00 மணிக்கும் நடைபெறும்.

## எதிரணியின்

முழுமையான அரசாங்க வளங்களையும், பாதுகாப்பையும் பெற்றுக் கொள்வது தான் என்றும் இதன் மூலம் எப்படி சுதந்திரமான ஓர் தேர்தலை நாம் எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## மட்டக்களப்பில்

இலங்கையிலேயே மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக கட்சிகள் போட்டியிடும் என கூறப்படுகிறது.

கடந்தபொதுத்தேர்தலைப் போன்று தமிழர் விடுதலைக் கூட்டணி சின்னத்தின் கீழ் தமிழ்க் கட்சிகள் போட்டியிடும் சூழ்நிலை இல்லைஎன்று அரசியல் வட்டாரங்கள் தெரி

# வெள்ளி விழாக் காணும்

## கத்தோலிக்க மறையாசிரியர்

யாழ். கத்தோலிக்கத் திருச்சபையில் கடந்த 25 வருடங்களாக மறைப்பணியாற்றி - தற்பொழுது கிளிநொச்சி மறைக் கோட்டத்தில் தனது பணியைத் தொடருகின்ற முழு நேர மறையாசிரியர்



### திரு. ச. ஆரோக்கியநாதர்

அவர்களின் வெள்ளி விழா நிகழ்வுகள் கிளிநொச்சியில் நடைபெறவிருக்கின்றன.

| காலம்: | இடம்: | நேரம்: |
|---|---|---|
| 30-6-94 வியாழக்கிழமை | மேய்ப்புப்பணி நிலையம் கிளிநொச்சி. | காலை 9-00 |
| 1-7-94 வெள்ளிக்கிழமை | புனித திரேசாள் ஆலயம் கிளிநொச்சி. | மாலை 5-00 |

வெள்ளி விழா நாயகர் தன்னை வளர்த்துவிட்ட ஆயர்கள், குருக்கள், துறவிகள், நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் உள்ளம் நிறைந்த நன்றி கூறுகின்றார். மேற்படி நிகழ்வுகளில் பங்குபற்றுமாறும் அகமகிழ்வுடன் அழைக்கின்றார்.

வெள்ளி விழா நாயகரை அவரது சில்லாலை கதிரைமாதா ஆலயத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அவரது பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றார்கள்.

சில்லாலை கதிரைமாதா ஆலயத்
திருச்சபை நண்பர்கள்

(சி-9887)


## 2-ம் ஆண்டு நினைவாக...



யாது என தெரிவித்துள்ளார்.

# 1-வது பிறந்தநாள் வாழ்த்து

28 6-94



## செல்வன் மகேஸ்வரன் ஜனார்த்தனன்

உடுவில் நாகம்மாள் கோவில் வீதியைச் சேர்ந்த மகேஸ்வரன்-சந்திரகாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜனார்த்தனன் இன்று தனது முதலாவது பிறந்தநாளை தனதில்லத்தில் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, காந்தி சித்தி, குட்டி சித்தி, சுவிஸ் மாமா சவுதி மாமா, அனுஸ் மாமா, மற்றும் முத்தமிழ் வீதி அப்பப்பா, அப்பம்மா, ஈசன் சித்தா, அனுஷா அத்தை, பெரியம்மம்மா, சின்ன அம்மம்மா, கிளிநொச்சி சந்திரன், இந்திரன் சித்தா, உதயன் சித்தா குடும்பத்தினர் (கொழும்பு) ரஞ்சன் சித்தா குடும்பத்தினர், மதிசித்தா, ஆகியோர் இவரை நீடூழி பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(8659)

-- குடும்பத்தினர்.

மிருந்து நேற்று வந்த அறிவுறுத்தல் ஒன்றில் பிரதேச செயலகங்கள் வடக்கிலுள்ள மேற்படி நான்கு மாவட்டங்களிலும் முறைப்படி ஸ்தாபிக்கப்படாமையினால் மாகாண சபை பிரதேச செயலர்களின் கடமைகளை மேற்பார்வை செய்யும்படி அரச அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (சி)

**காலிங்க**

இணைவது ஏன் என்பது தொடர்பாக அவர் இன்று செய்திபாளர் மாநாடு ஒன்றில் விளக்கிக் கூற இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

## தற்கொலை

இராணுவத்திலிருந்து தப்பி ஓடி தலைமறைவாக வாழ்க்கை நடத்தி வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் இளம்பெண் ஒருவரைக் குத்திக் கொலை செய்ததுடன், துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

மீரிகம பொலிஸ் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரணசிங்க ஆராட்சிகே செல்டன் செனவிரட்ண (வயது 21) என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார்.


யாழ். ஸ்ரீதரில்

STEVENSPIELBERG

இயக்கிய

JURASSIC PARK

(அறிவியல் சார்ந்த திகில் படம்)

தினசரி 4, 6

சனி, ஞாயிறு 1030
4,6 மணி

(சி-9872)


யிடும் சூழ்நிலை இல்லையென்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஈரோஸ் குழு ஐ. தே. கவுக்கு ஆதரவளிக்க சுயேட்சையாக போட்டியிடுவதாக தெரியவருகிறது. ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த பசீர் சேகு தாவூத் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இணைந்துள்ளார்.

## கொழும்பில்

அண்மையில் புலிகளின் புலனாய்வுபிரிவைச் சேர்ந்த எட்டுப்பேர் கொழும்பில் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து இவர்கள் அளித்த வாக்குமூலத்திலே இத்தகவல் தமக்கு கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.



## கப்டன் வீரமணி

(கணேசபிள்ளை சந்திரசேகரம்)

திருகோணமலை

(1992இல் கட்டைக் காட்டு சமரில் வீரச்சாவு)

பிறப்பு 5-4-1,70

வீரச்சாவு 28-6-1992

சின்னப் பூவிழி நெருப்பைச் சுமந்ததும்
செருக்களத்தினில் பகை முடித்ததும்
விண் துகள்பட நீ நிமிர்ந்ததும்
வீரமணியெனப் பெயர் எடுத்ததும்
மண்விடுதலை என்று திரிந்ததும்
மலைசரிந்தது போல விழுந்ததும்
கண்பட்டது போல முடிந்ததா?
காலமிங்கொரு கவிதை வடிக்குமா?

(8668)

- நண்பர்கள்


தவிடு விலை குறைப்பு

சோழன் நெல் அரிசி வாணிப

நிலையத்தில் இன்றுமுதல்

கிலோ பதினாறு ரூபாவாக இருந்த நம்பர் I தவிடு பதின்மூன்று ரூபாவுக்கும்

கிலோ பதின்நான்கு ரூபாவாக இருந்த நம்பர் II தவிடு பதினொரு ரூபாவுக்கும் பெற்றுக்கொள்ளலாம்

என்பதை வியாபாரிகளுக்கும் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

சோழன் நெல் அரிசி வாணிபம்

பலாலி சாலை திருநெல்வேலி.

கிளை :-

★ பருத்தித்துறை சாலை நெல்லியடி
★ சோழன் அரிசி ஆலை மீசாலை.
★ சோழன் நடமாடும் விற்பனை நிலையம்

(சி-9891)


**சீதனக் கொடுமையை நிந்திப்போம்**

**காதலால் நெஞ்சங்கள் சந்திப்போம்**


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது